III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.125/2017 and OS.No.355/2019

Deposition of witness for the Defendant/DW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 08-01-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : மாதேஸ்குமார் | Village | : |
| Father's Name | : குப்புசாமி | Calling | : |
| Age | : | Taluk | : |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் உரிமைகோரும் சொத்தின் விஸ்தீரணம் 3 கிரவுண்டு. அதன் புல எண் 515/3B, பட்டாவின் படி 515/3B மற்றும் 4B. வா.த.சா.10 முதல் 12 ஆவணங்களின் புல எண்கள் 515/3B and 516/1B1C என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணங்கள் எனது மற்றும் பிரதிவாதிகள் 2 மற்றும் 3 ஆகியோரின் பெயரில் உள்ளது. வழக்கு சொத்தின் மேற்புறம் கால்வாய் சாலை உள்ளது. வழக்கு சொத்துக்கும் கால்வாய் சாலைக்கும் நடுவில் கால்வாய்க்கான பைப்புகள் புதைக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்தை சுற்றியுள்ள மற்ற 3 புறங்களில் மற்ற சொத்தின் உரிமையாளர்கள் கட்டியுள்ள சுற்றுச்சுவர் உள்ளது என்றால் 2 புறங்களில் அவ்வாறு உள்ளது 3 வது புறத்தில் சுற்றுச்சுவர் உள்ளதா என்று எனக்கு சரிவர தெரியவில்லை. வா.த.சா 10 முதல் 12 வரையிலான ஆவணங்களில் சொத்தின் விஸ்தீரணம் 7462 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இருப்பினும் எனது வழக்குரையின் அந்த விஸ்தீரணம் 7440 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வழக்குறையில் கால்வாய் அமைப்பதற்கு அரசாங்கம் 1224 சதுரடி கையப்படுத்தியுள்ளது என்றும் ஆதலால் மீதம் 580 சதுரடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அரசு கையகப்படுத்துவதற்கு முன்னர் எனக்கு அறிவிப்பு அனுப்பியதா என்றால் இல்லை. எனது சொத்தை அரசு எடுத்து கொண்டதற்கு எனக்கு இழப்பீடு ஏதேனும் கொடுத்தா என்றால் இல்லை. ஏற்கனவே அரசு அந்த இடத்தில் கால்வாய் அமைத்து விட்டது என்றும் ஆதலால் தான் அந்த இடத்திற்கு கால்வாய் தெரு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஆதலால் நான் வாங்கியதற்கு பின்னர் அரசு எடுத்துக்கொண்டதாக நான் சொல்லியிருப்பது தவறானது என்று சொன்னால் சரியல்ல. எந்த வருடத்தில் அரசு 1224 சதுரடி இடத்தை கையகப்படுத்தி கொண்டது என்பது எனக்கு தெரியாது. நான் 5ம் பிரதிவாதியிடம் இருந்து அவரின் முகவரான 6ம் பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்தை வாங்கினேன். நான் சொத்தை ராமசாமி நகர் விரிவு பகுதியில் வாங்கினேன். வா.த.சா.10 முதல் 12 வரையிலான ஆவணங்களில் ராமசாமி நகர் என்று உள்ளது தவிர ராமசாமி நகர் விரிவு என குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. ராமசாமி நகர் லேஅவுட்டை நாகராஜ் தான் அமைத்தார் என எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.த.சா.8 செட்டில்மெண்ட் பத்திரத்தில் அதை எழுதிய 4 வது பிரதிவாதி சரோஜா தனக்கு முன்னர் தாவா சொத்தின் உரிமையாளர்கள் குறித்தோ அவர்கள் மறைவு மற்றும் வாரிசுதாரர்கள் குறித்தோ விவரங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். வா.த.சா.8 ல் ராமசாமி நகர் விரிவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது

S BALAKRISHNAN

Digitally signed by S BALAKRISHNAN
Date: 2025.01.08 17:17:35 +0530

**என்றால் சரிதான். அதில் மொத்தமாக 60 செண்ட் என குறிப்பிடபட்டுள்ளது என்றும் 30 செண்ட் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதில் 30 செண்ட் ராமசாமி நகர் விரிவில் உள்ளதாகவும் மீதமுள்ள 30 செண்ட் கொரட்டூர் கிராமத்தில் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.த.சா.9 ல் ராமசாமி நகரில் 2 சர்வே எண்கள் வருவதாக குறிப்பிட்டுள்ளது. வா.த.சா.8 மற்றும் 9 ஆவணங்களை போலியாக தயாரித்து தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வா.த.சா.10 முதல் 12 வரையிலான ஆவணங்களை உருவாக்கி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.த.சா.8 முதல் 12 வரையிலான ஆவணங்களை நான் எனது தரப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.**

(கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).

S BALAKRISHNAN

Digitally signed by S BALAKRISHNAN
Date: 2025.01.08 17:17:48 +0530